**MCOP: 34/2024**

Date: 28.03.2026.

ம.சா.1 சுகந்தி , த/பெ.மாரிமுத்து

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1. விபத்தானது 29.01.2024 அன்று 1.35 முதல் 1.40 மணிக்குள் நடந்தது. விபத்து சமயத்தில் நான் நடந்து சென்றேன். விபத்தானது தூத்துக்குடி To திருச்செந்தூர் ரோட்டில் முத்தையாபுரதிலிருந்து சவேரியார்புரம் ரோட்டில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அருகில் நான் ரோட்டை கடக்க முற்பட்டபோது விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது நான் ரோட்டின் நடுமையத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருக்கும் போது எனக்கு பின்னால் வந்த வாகனம் வருவதையும் Horan அடிக்கிற சத்தத்தை நான் கவனிக்காமலும் சென்றதால் எனக்கு பின்னால் வந்த வாகனம் இடித்து நான் கீழே விழுந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அது மண் சாலை என்பதால் நான் ரோட்டின் இடது புறமாக சென்று கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் வந்து இடித்திருந்தால் பெரிய உயிர்சேதம் ஆகியிருக்கும். நான் ரோட்டின் நடுமையத்தில் சென்று கொண்டிருந்தபோது Horan அடித்து மெதுவாக வாகனம் வந்ததால் தான் இலேசான காயங்கள் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் காயம் பட்ட உடன் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கபட்டேன் என்று சொன்னால் சரிதான். அதன் பின்பு மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடி AVM மருத்துவமனையிலும் அதன்பின்பு

மதுரை வேலம்மாள் மருத்துவமனையிலும் அதன்பின்பு தெய்வா Nursing Home லும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பூரணமாக குணமடைந்து விடுவிக்கப்பட்டேன் என்று சொன்னால் தற்போதும் வெளிநோயாளியாக சிகிச்சையில் இருந்து வருகிறேன். நான் தற்போது வரை வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துவருவதற்கான எந்த ஒரு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் நான் கையில் வைத்துள்ளேன். இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ பகுதி நேர ஊனமோ ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் மெடிக்கல் Shop ல் வேலை செய்து வந்தேன் அப்போது ரூ.15000/- வரை சம்பாதித்தேன் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போதும் அதே வேலையை பார்த்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே பார்த்திருந்த வேலையை தற்போதும் பார்த்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக தற்போது மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த இழப்பீடு வழக்கானது விபத்து நடந்து 6 மாதத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் 6 மாத காலத்தை தாண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த இழப்பீடு வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது முழுக்க முழுக்க என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமலும் ரோட்டை கடக்க முயன்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்துள்ள என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் எதிர்கால சிகிச்சைக்காக தொடர இருக்கும் எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் அதற்காக பல்வேறு தலைப்புகளின் கீழ்

கேட்டுள்ள தொகை மிகவும் அதிகப்படியானது என்றும் அது தங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும் மேலும் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்ட தொகை மிகவும் அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கேட்ட இழப்பீடு தொகை உங்களுக்கு கிடைக்க தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த 3ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடு தொகையும் கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல.

(1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**